மருத்துவமனை முதல்வர் அவர்களிடம் அனுமதி கேட்டு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அனுமதி பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 337, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

337—

குளிர்பதனக் கிடங்கு

***4616—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலைப் பகுதியில் வேளாண் விளைபொருட்களுக்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

செங்கம் சட்டமன்றத் தொகுதியை சீர்மணக்கச் செய்திட்ட செந்தமிழின் ஜவ்வாது மணமே, (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையின் செந்தமிழ் நாட்டில் செங்கம் சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி பெற, மக்கள் நலம் பெற, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு செங்கம் சுரேஷ்குமார் அவர்கள், தான் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற, வெற்றிக்கே இலக்கணம் வகுத்து வாகை சூடிய, வீர வரலாறு படைத்திட்ட பிரபஞ்சத்தின் வெற்றித் திருமகளை நன்றி உணர்வோடும், விசுவாசத்தோடும், நேரில் சந்தித்து, வரம் கேட்டு, வணங்கிய கரங்கள் விலகும் முன்பே வரம் தந்த அன்னை அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) செங்கம் சட்டமன்றத் தொகுதியில், செங்கத்தைத் தலைமையிடமாகக்

கொண்டு இயங்குகின்ற வேளாண் விற்பனைக் குழுவில் 31 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைத்து, அதனை தன் பொற்கரங்களால் கடந்த 27—6—2014 அன்று திறந்து வைத்து, செங்கம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பினைத் தந்துள்ளார்கள்.

முற்பகல் 10—45

மேலும், மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, ஜவ்வாது மணம் பரப்பும் இயற்கை அன்னையின் எழில் அழகோடு, தென்றலை தாலாட்டாக தந்துகொண்டிருக்கிற ஜவ்வாது மலைப் பகுதியில் மலைவாழ் மக்களின் நலன்கருதி அவர்கள் விளைவிக்கும் வேளாண் பொருட்களைச் சேமித்து வைக்க ஏதுவாக ஏழைகளின் ஏந்தல், எளியோரையும் வலியோராக்கும் வல்லமைத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு அமைக்க மீண்டும் வரம் தந்துள்ளார்கள் என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, கும்பிடும் கைகள் விலகும் முன்னே வரமளிக்கும் தாயே! என் தொகுதிக்காக கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்த அட்சயப் பாத்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதியிலுள்ள ஜவ்வாது மலைப் பகுதியில் மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கின்றனர். இவர்களின் விவசாயப் பொருட்களுக்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்கக் கேட்டேன்; குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தருவேன் என்று கூறிய விவசாயிகளின் ஒளிவிளக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.